# 4 இலங்கையின் அபிவிருத்தி மட்டத்தை ஏனைய தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிடுதல்

இலங்கையர்களாகிய நாம் அனைவருமே எமது வாழ்க்கையை மேம்படுத்தி முன்னேற்றப் பாதையில் செல்வதையே விரும்புகிறோம். இவ்வாறே உலக மக்களும் வாழ்க்கையை மேம்படுத்தும் முயற்சியில் வெற்றி ஈட்டுவதற்கான போட்டியில் ஈடுபட்டு வருகின்றனர். தனிநபர், குடும்பம், நாடு, இனம் என்ற ரீதியில் முன்னேறுவதற்கு எடுக்கப்படும் இம்முயற்சியானது ''அபிவிருத்தி'' என இனங்காணப்படுகிறது.

காலத்துக்குக் காலம் அபிவிருத்தி என்பதற்குப் பல்வேறு விளக்கங்களும் வரைவிலக்கணங்களும் பல்வேறு நிறுவனங்களாலும் தனிநபர்களினாலும் வழங்கப்பட்டு வந்துள்ளன. அவ்வாறான விளக்கங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

"அபிவிருத்தி என்பது உலக மக்களின் வாழ்க்கை நிலைமையினை மேம்படுத்துவதாகும்." முதலாம் அபிவிருத்தித் தசாப்தம் 1961 - 1970 ஐக்கிய நாடுகள் அமையம்.

குறிப்பிட்ட ஒரு நாட்டின் வறுமை, வருமான ஏற்றத்தாழ்வுகள், வேலையின்மை போன்ற துறைகளை உயர்ந்த மட்டத்திலிருந்து தாழ்ந்த மட்டத்திற்குக் கொண்டுவருதல் அபிவிருத்தியாகும்.

**டட்லி சியர்ஸ் - 1972**

அபிவிருத்தி தொடர்பாக மேலே குறிப்பிட்டுள்ள விளக்கங்களுக்கு ஏற்ப அபிவிருத்தி என்பது,

பொருளாதாரம், சமூகம், அரசியல், கலாசாரம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் சமகாலத்தில் ஏற்படும் முன்னேற்றமாகும்.

தரம் 8 இல் உள்ள மாணவர்களுக்கு ''அபிவிருத்தி'' என்பது பற்றி விளக்குவதற்கு நாவல மத்தியமகா வித்தியாலய புவியியல் பாட ஆசிரியர் பின்பற்றிய உத்தியினைப் பற்றி இப்போது நாம் கவனஞ் செலுத்துவோம்.



**உரு 4:1 கிராமிய வீடு (வசதிகள் குறைந்த வீடு)**



**உரு 4:2 நவீன வீடு (வசதிகள் நிறைந்த வீடு)**



- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -

அபிவிருத்தி தொடர்பான விளக்கங்கள் சிலவற்றை எடுத்துக் கூறிய ஆசிரியர் மேலே காட்டப்பட்டுள்ள படங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்தினார். சில நிமிடங்களின் பின்னர் வகுப்பு மாணவர்களிடம் பின்வரும் வினாக்களைக் கேட்டார்.

## செயற்பாடு

1. ''அபிவிருத்தி'' என்றால் என்ன?
2. உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள படங்களை ஆதாரமாகக் கொண்டு அபிவிருத்தி பற்றிய உங்கள் கருத்துக்களைக் கூறுங்கள்.

வழங்கப்பட்ட படங்களின் ஆதாரத்துடன் மாணவர் கூறிய கூற்றுகள் தொகுக்கப்பட்டு ஆசிரியரினால் கரும்பலகையில் அட்டவணைப்படுத்தப்பட்டது. அந்த அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

1. அபிவிருத்தி என்பது மனிதனின் முன்னேற்றமாகும்.
2. 

| **உரு.4.1 கிராமிய வீடு.** | **உரு 4.2 நவீன வீடு.** |
|---|---|
| ♦ வசதிகள் குறைவு | ♦ வசதிகள் அதிகம் |
| ♦ பாதுகாப்பு குறைவு | ♦ பாதுகாப்பு அதிகம் |
| ♦ உறுதியற்றது | ♦ உறுதியானது |

மாணவர்களால் முன்வைக்கப்பட்ட தகவல்கள் இரு வீடுகளின் முன்னேற்ற மட்டம் பற்றி மதிப்பீடு செய்யப் போதுமானதே. எனினும் நாடுகளின் அபிவிருத்தி மட்டத்தை அளவிடுவதற்கும் ஒப்பிடுவதற்கும் இதனைவிட மேலும் விரிவான தகவல்களை அறிதல் வேண்டுமெனக் கூறிய ஆசிரியர் பின்வரும் தகவல்களை மாணவர்களுக்கு எடுத்து காட்டினார்.

### 1. தனிநபர் அபிவிருத்தியை அளவிடக் கூடிய அம்சங்கள்.

- ♦ செய்யும் தொழில்.
- ♦ பெறும் வருமானம்.
- ♦ பெற்ற கல்வி.
- ♦ வாழும் இல்லம்.
- ♦ ஓய்வு நேரத்தைக் கழிக்கும் விதம்.
- ♦ பயன்படுத்தும் கருவிகளும் பொருட்களும்.
- ♦ பிறருக்கு உதவுதல்.
- ♦ போசணை மட்டம்.
- ♦ விழுமியங்கள்
- ♦ சுகாதார வசதிகள் போன்றன.

**2. நாடுகளுக்கிடையே அபிவிருத்தி மட்டத்தை ஒப்பிடக்கூடிய துறைகள்.**

- கல்வி
- நாட்டின் வருமானம்
- சுகாதாரம்
- நாட்டின் கடன் தன்மை
- போக்குவரத்து
- தொடர்பாடல்
- பாதுகாப்பு
- விவசாயத் துறையின் முன்னேற்றம்
- கைத்தொழில் முன்னேற்றம்
- சமூக நலன்புரித் துறைகள் ஆகியன

ஆசிரியர் இத்தகவல்கள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் அடுத்ததாக தென்னாசிய நாடுகளின் அபிவிருத்தி பற்றிய தகவல்கள் தொடர்பாக பாடப்புத்தகத்தில் உள்ள பாடத்தைக் கற்பிப்பதற்கு மாணவர்களைத் தயாராக்குவதற்கான பணிகளில் ஈடுபட்டார்.

தென்னாசிய நாடுகளின் அபிவிருத்தியானது பல்வகைப்பட்டதாகக் காணப்படுகிறது. இதற்கு இந்நாடுகளின் அளவு, பெருமளவிலான வளங்கள், தொழினுட்ப அறிவு போன்றன காரணங்களாகும். விவசாயம், தொழினுட்பம் ஆகிய துறைகளில் இந்தியாவும், பாகிஸ்தானும் முன்னணியில் விளங்குகின்றன. இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளில் சமூக அபிவிருத்தி உயர்மட்டத்தில் காணப்பட, நேபாளம், பூட்டான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் பொருளாதார, சமூக அபிவிருத்தி மட்டமானது தாழ்ந்த மட்டத்தில் காணப்படுகிறது.

இலங்கையின் அபிவிருத்தி மட்டத்தை தென்னாசிய நாடுகளின் அபிவிருத்தி மட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

நான்கு முக்கிய துறைகளினூடாக இலங்கையின் அபிவிருத்தி மட்டத்தை தென்னாசிய வலயத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கமுடியும்.

1. சுகாதாரம்.
2. எழுத்தறிவு.
3. வேலை வாய்ப்பு.
4. ஆள்வீத வருமானம்.

எழுத்தறிவு, பிறப்பின்போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம், சிசு மரணவீதம், தாய்மார் மரணவீதம் எனும் துறைகள் மனித அபிவிருத்திப் பண்புகளை ஒப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படும்.

## 4.1 சுகாதாரம்

சுகாதாரத்துறையில் அடங்கும் பல்வேறு பிரிவுகள் உரு 4.3 இல் காட்டப்பட்டுள்ளன.

### செயற்பாடு

1. உரு 4.3 இல் தரப்பட்டுள்ள படங்களில் காணப்படும் விடயங்களைக் குறிப்பிடுக.
2. நீங்கள் வாழும் பிரதேசத்தில் உள்ள வைத்தியசாலையில் காணப்படும் வசதிகள், பிரச்சினைகள் என்பன பற்றிக் கண்டறிந்து ஓர் அறிக்கை தயாரிக்குக.



**உரு 4.3 சுகாதாரத்துறையுள் அடங்கும் பிரிவுகள்**

உரு 4.3 இல் உள்ள உருவிலுள்ள பின்னணித் தகவல்கள் மேலும் முன்னேற்றமடையும் போது நாட்டு மக்களின் சுகாதார நிலைமை உயர் மட்டத்தினை அடையும். இது அபிவிருத்தியின் சிறப்பியல்பாகும்.

இலங்கை உட்பட அனைத்துத் தென்னாசிய நாடுகளின் அரசாங்கங்களும், தன்னார்வ அமைப்புக்களும், சர்வதேச அமைப்புக்களும் மக்களின் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கு பல்வேறு சேவைகளையும் முதலீடுகளையும் மேற்கொண்டுள்ளன.

## சுகாதாரத் துறையின் அபிவிருத்திக்காக தென்னாசிய நாடுகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்

- மருத்துவமனைகள் அமைத்தல்.
- சுகாதார சேவைக்காக ஒதுக்கப்படும் நிதி அளவினை அதிகரித்தல்.
- மக்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நன்மைகளை மேலும் விருத்தி செய்தல்.
- சுகாதாரத்துறைச் சேவையில் ஈடுபட்டுள்ள பல்வேறு அலுவலர்களின் பயிற்சி, நிபுணத்துவ அறிவு என்பவற்றை விருத்தி செய்தல்.
- சுகாதார பழக்க வழக்கங்களை விருத்தி செய்வதற்கான அறிவை வழங்குதல்.

மேற்கூறிய நடவடிக்கைகளுடன் நாட்டின் சுகாதாரத் துறையில் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றன.

நாட்டு மக்கள் நோய்களினின்றும் நீங்கி ஆரோக்கியமானவர்களாக வாழ்வதற்கு இவ்வலயத்தின் எல்லா நாடுகளும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

1. தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல். →
   - கூகைக்கட்டு.
   - பெரியம்மை.
   - சின்னம்மை.

2. மருத்துவ சிகிச்சைகள் நடாத்துதல். (வைத்தியசாலையினுள் / நடமாடும்) →
   - கர்ப்பிணித் தாய்மார் சிகிச்சை.
   - பற் சிகிச்சை.
   - கண் சிகிச்சை.

3. மக்கள் சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல். →
   - (சுத்தமான) தூய்மையான சூழலை ஏற்படுத்துதல்.
   - கழிவுப் பொருட்களை அகற்றுதல்.
   - சுத்தமான நீரைப் பயன்படுத்தல்.

4. மருத்துவ ஆலோசனைகளை வழங்குதல். →
   - தொற்று நோய்களை கட்டுப் படுத்தல்.
   - போசணை மட்டத்தை மேம் படுத்துதல்.
   - குடும்பநல சுகாதார மட்டத்தை விருத்தி செய்தல்.

5. நோய்த்தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள். →
   - தொண்டைக்கரப்பான்
   - குக்கல் இருமல்
   - இளம்பிள்ளைவாதம் (போலியோ)


- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -

மக்கள் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களினால் நன்மைகளை அனுபவிக்கும் போது நாட்டின் சுகாதாரத்துறையில் முன்னேற்றம் ஏற்படும், இதற்கேற்ப

- சிசு மரண வீதம் குறைதல்.
  (பிறப்பிலிருந்து ஒரு வயதிற்குள் ஏற்படும் மரணம்)
- தாய்மார் மரண வீதம் குறைதல்.
  (கர்ப்பிணித் தாய்மார்கள் மகப்பேற்றின் போது இறக்கும் எண்ணிக்கை)
- பிறப்பிலிருந்து எதிர்பார்க்கும் ஆயுட் காலம் அதிகரித்தல்.
  (குழந்தை பிறப்பிலிருந்து வாழும் ஆண்டுகள்)
- வைத்தியர் ஒருவரிடம் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவடைதல்.
- வைத்தியசாலை வார்டுகளில் (Wards) உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை அதிகரித்தல் போன்ற தன்மைகளைக் காணலாம்.

அட்டவணை 4.1 இல் தென்னாசிய நாடுகளின் சுகாதாரத்துறை தொடர்பான சமூகக் குறிகாட்டிகள் காணப்படுகின்றன. சுகாதாரத்துறை விருத்தி பற்றி இதுவரை நீங்கள் பெற்ற அறிவைப் பயன்படுத்தி தென்னாசிய நாடுகளின் அபிவிருத்தி மட்டத்தை ஒப்பிட்டுப் பாருங்கள்.

### தென்னாசிய நாடுகளில் வைத்தியர்கள், வைத்தியசாலைகளின் படுக்கைகள் எண்ணிக்கை சார்பில் சனத்தொகை.

| நாடுகள் | இலங்கை | இந்தியா | பாகிஸ்தான் | பங்களாதேஷ் | நேபாளம் | பூட்டான் | மாலைதீவு |
|---|---|---|---|---|---|---|---|
| மருத்துவர் ஒருவருக்கான சனத்தொகை 1999 | 3132 | 1916 | 1544 | 4102 | 25001 | 6510 | 1358 |
| வைத்தியசாலை படுக்கை ஒன்றுக்கான சனத்தொகை 1998 | 349 | 1493 | 1429 | 3333 | 5000 | 625 | 705 |

**அட்டவணை 4.1**
**ஆதாரம்: இலங்கை சமூக பொருளாதார தரவு - 2002**
**(இலங்கை மத்திய வங்கி)**

## செயற்பாடு

1. மேலே தரப்பட்டுள்ள அட்டவணைக்கேற்ப ஒரு வைத்தியருக்கான சனத்தொகை எண்ணிக்கை மிகக்குறைவான நாட்டையும், சனத்தொகை எண்ணிக்கை மிகக்கூடுதலாக உள்ள நாட்டையும் குறிப்பிடுக.
2. தென்னாசிய நாடுகளில் வைத்தியர் ஒருவருக்கான சனத்தொகையையும் வைத்தியசாலை படுக்கை ஒன்றுக்கான சனத்தொகையையும் ஒழுங்கு வரிசைப்படுத்தி எழுதுக.
3. இலங்கையின் சமூக அபிவிருத்தியை ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக.

**தென்னாசிய நாடுகளில் சிசு மரணவீதம், தாய்மார் மரணவீதம் பிறப்பின்போது ஆயுள் எதிர்பார்ப்பு**

| நாடுகள் / குறிகாட்டி | ஆண்டு | இலங்கை | இந்தியா | பாகிஸ்தான் | பங்களாதேஷ் | நேபாளம் | பூட்டான் | மாலைதீவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| சிசு மரணம். (உயிர் பிறப்பில் 1,000 இற்கு) | 2011 | 15 | 50 | 64 | 45 | 53 | 47 | 11 |
| தாய்மார் மரணம். (உயிர் பிறப்பில் 100,000 இற்கு) | 2005 | 39 2008 | 230 2008 | 260 2008 | 340 2008 | 380 2008 | 200 2008 | 37 2008 |
| பிறப்பில் ஆயுள் எதிர் பார்ப்பு. (ஆண்டுகள்) | 2011 | 74 | 64 | 65 | 69 | 68 | 69 | 73 |

**அட்டவணை 4.2**
**மூலாதாரம் - இலங்கை சமூக, பொருளாதார தரவுகள் - 2007 (இலங்கை மத்திய வங்கி)**

**http://prb.org/publications/ Datasheets/2011 world population-data-sheet/data-sheet.aspx**

நாடு அபிவிருத்தி அடையும் போது சுகாதாரத் துறையும் வளர்ச்சி அடையும்.

## செயற்பாடு


1. தென்னாசிய நாடுகளுக்கிடையே
   I சிசு மரண வீதம்.
   II தாய்மார் மரண வீதம்.
   III பிறப்பின் போது ஆயுள் எதிர்பார்ப்பு.
   என்பன மிகக் கூடுதலாக உள்ள நாட்டையும், மிகக் குறைவாக உள்ள நாட்டையும் குறிப்பிடுக.
2. I. அட்டவணை 4.2 இன்படி சமூக அபிவிருத்தி உயர்மட்டத்தில் இருக்கின்ற இரண்டு நாடுகளைக் குறிப்பிடுக.
   II. அதற்கான மூன்று காரணங்களைத் தருக.
3. தென்னாசியாவிலுள்ள ஏனைய நாடுகளைவிட இலங்கையில் சிசுமரண வீதம், தாய்மார் மரணவீதம் என்பன குறைவாகவும் பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பு கூடுதலாகவும் இருப்பதில் செல்வாக்குச் செலுத்துவன எனக் கருதப்படும் மூன்று காரணங்களை அட்டவணைப்படுத்திக் காட்டுக.
4. அட்டவணை 4.2 இலுள்ள ஒரு தரவினை விருப்பத்தின்படி தெரிவு செய்து பொருத்தமான அளவுத்திட்டப்படி நிரல் வரைபொன்றை ஆக்குக. அது பற்றி இரண்டு வாக்கியங்கள் எழுதுக.

## எழுத்தறிவு



உரு 4.4

குறிப்பிட்ட மொழி ஒன்றினால் எழுதுதல் வாசித்தல், விளங்கிக் கொள்ளுதல் ஆகிய திறன்கள் எழுத்தறிவு எனக்கொள்ளப்படும். நாங்கள் அனைவரும் குறிப்பிட்ட மொழி ஒன்றின் உதவியுடனேயே தொடர்பாடல் நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். பெரும்பாலான நாடுகளில் தனித்துவமான தாய்மொழி ஒன்று காணப்படும். பல்வேறு இனங்கள், பல்வேறு நாடுகள் என்பவற்றுடன் தொடர்பாடல்களை மேற்கொள்ளும் போது தாய்மொழியைவிட மேலதிகமாக வேறு பல மொழிகளைப் பேசுதல், எழுதுதல், வாசித்தல் என்பவற்றிலான திறன் பெற்றிருத்தல் மூலம் பல நன்மைகளைப் பெறமுடியும்.




உரு 4.4

குறிப்பிட்ட மொழியில் எழுதுதல், வாசித்தல், கருத்தை வெளிப்படுத்தல் என்பவற்றிலான திறன் பாடசாலைக் கல்வியின் மூலம் மேம்படுத்தப்படுகிறது. பெரும்பாலான நாடுகளில் கல்வி வழங்குதல் அரசாங்கத்தின் நலன்புரிச் சேவையாகக் கருதப்பட்டு இலவசமாக வழங்கப்படுகிறது.

இலங்கை அரசும் கல்வியின் அபிவிருத்திக்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதனை உரு 4.5 இல் காணலாம்.

**கல்வி அபிவிருத்திக்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்.**




உரு 4.5

## செயற்பாடு

1. இலங்கை அரசாங்கம் கல்வியினை விருத்தி செய்வதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் விதத்திலான சுவரொட்டி ஒன்றைத் தயாரிக்குக.
2. கல்வியினை மேம்படுத்துவதற்காக பாடசாலை, குடும்பம் என்பவற்றிலிருந்து உங்களுக்கு வழங்கப்படும் வசதிகளை வெவ்வேறாக எழுதுக.
3. இத்தகைய வசதிகளை அனுபவிக்கும் நீங்கள் நாட்டுக்கு செய்ய வேண்டிய கடமைகள் ஐந்தினை எழுதுக.

சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 5 தொடக்கம் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு பாடசாலை கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும் பாடசாலை செல்லும் வயதுள்ள சிறுவர்களை வேலையில் அமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் அரசு மேற்கொள்வது நாட்டு மக்களின் எழுத்தறிவை மேம்படுத்துவதற்காகும்.

நாட்டு மக்களின் மனித அபிவிருத்தியை அளவிடுவதற்கு எழுத்தறிவு பயன்படுத்தப்படுகிறது.

நாடுகளிடையே அபிவிருத்தி மட்டத்தை ஒப்பிடும் போது எழுத்தறிவு ஒரு சிறந்த அளவுகோலாகக் கருதப்படுகிறது. ஏனெனில் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் அடிப்படையாக அமைவது எழுத்தறிவு என்பதினாலாகும். இலங்கையின் எழுத்தறிவு மட்டத்தை தென்னாசியாவிலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

### தென்னாசிய நாடுகளின் எழுத்தறிவு மட்டம் (சதவீதத்தில்)

| நாடுகள் / ஆண்டு | இலங்கை | இந்தியா | பாகிஸ்தான் | பங்களாதேஷ் | நேபாளம் | பூட்டான் | மாலைதீவு |
|---|---|---|---|---|---|---|---|
| 1999 | 91.0 | 57.0 | 45.0 | 41.0 | 40.0 | 42.0 | 96.0 |
| 2004 | 92.5 | 61.0 | 49.9 | 41.0 | 48.6 | 47.0 | 97.2 |

**அட்டவணை 4.3**
**ஆதாரம்: இலங்கை சமூக பொருளாதார தரவு 2002-2007 (இலங்கை மத்திய வங்கி)**

## செயற்பாடு

1. அட்டவணை 4.3 இல் தரப்பட்டுள்ள தகவல்கள் அடங்கும் வகையிலான நிரல் வரைபு ஒன்றை வரைந்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக. அதனை உங்கள் பயிற்சிப் புத்தகத்தில் பிரதி செய்க.
2. I. 2004ம் ஆண்டில் எழுத்தறிவு மட்டம் உயர் சதவீதத்தில் உள்ள நாடு எது?
   II. 2004ம் ஆண்டில் எழுத்தறிவு மட்டம் மிகத் தாழ்ந்த நிலையிலுள்ள நாடு எது?
   III. இதில் செல்வாக்கு செலுத்துபவை என நீங்கள் கருதும் மூன்று காரணங்களைத் தருக.
3. 1999 - 2004 வரையிலான காலப்பகுதில் எழுத்தறிவு மட்டம் துரித கதியில் விருத்தி பெற்ற நாடு எது?
4. இலங்கையின் எழுத்தறிவு மட்டத்தை ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டு அது பற்றிய உங்களின் கருத்துக்களை எடுத்துக் கூறுக.

தென்னாசிய நாடுகளின் எழுத்தறிவு மட்டம் பல்வகைப்பட்டனவாக இருப்பது போலவே நாட்டினுள்ளேயும் பிரதேசங்கள், மாவட்டங்கள் என்பவற்றிலும் எழுத்தறிவு மட்டம் பல்வகைப்பட்டனவாகக் காணப்படுவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் பல உள்ளன.

- அரசின் பொருளாதார சக்தி. (மொத்த தேசிய உற்பத்தி.)
- சமூக கலாசார மனப்பாங்கு. (சமயம், சாதி, இனம்)
- ஆண் பெண் வேறுபாடு. (இந்தியாவிலுள்ள சில பழங்குடிகளில் பெண்கள் ஆண்களைவிட குறைவாக மதிக்கப்படுதல்.)
- குடும்பங்களின் பொருளாதார சக்தி.
- கல்விச் செயற்பாடுகளுக்காக அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள வசதிகள். (நலன்புரி சேவை, இலவசக் கல்வி வழங்கல்.)
- நாட்டின் ஆசிரியர் - மாணவர் விகிதம்.
  (இலங்கையில் ஆசிரியர் ஒருவருக்குரிய மாணவர் 19 ஆகும்.)
  மூலம்: School Census-2007 Ministry of Education, Sri Lanka.)
- நாட்டில் கல்வி வசதிகள் விரிவாக்கத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள். (இலங்கையில் பிரபல பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் என்பன அதிக அளவில் மேல் மாகாணத்தில் காணப்படுதல்.)
- பிள்ளைகளின் போசணை மட்டம். (போஷாக்குக் குறைபாடு, நோய்கள் என்பன சிறந்த கல்வியைப் பெறுவதற்குத் தடையாக இருத்தல்.)
- வாழும் சுற்றுப்புறச் சூழல்.

ஒரு நாட்டில் மக்களின் எழுத்தறிவு மட்டம் உயர்வாகக் காணப்படுதல் மனித மற்றும் சமூக விருத்தி ஏற்படக் காரணமாக அமையும். அவ்வாறானவை:

- தாய்மார் இறப்பு குறைவடைதல்.
- ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தல்.
- போசணை மட்டம் அதிகரித்தல்.
- நோயற்ற வாழ்க்கையைக் கொண்டிருத்தல்.

- உயர் தொழில் வாய்ப்புக்களைப் பெறுதல்.
- சிறந்த வாழ்க்கையை நடாத்துதல்.
- தொடர்பாடல் வசதிகளைப் பயன்படுத்தல்.
- சிந்தித்துத் தீர்மானங்களை எடுத்து எதிர்காலத்தை திட்டமிடுதல்.
- எதிர்கால சந்ததியினருக்கு அறிவூட்டல்.
- உள்ள வளங்களை வருமானம் தரும் வழிகளில் பயன்படுத்தல்.
- சிறந்த வாழ்க்கையை நடாத்துதல்.

ஒரு வீட்டின் அல்லது நாட்டின் மக்களுடைய எழுத்தறிவு மட்டம் உயர்தரத்தில் விளங்குதல் நாட்டின் அபிவிருத்திக்குப் பெரிதும் உதவும்.

## செயற்பாடு

1. ஆசிரியரின் உதவியுடன், உங்கள் குடும்ப உறுப்பினரின் எழுத்தறிவு விருத்தியடைதல் உங்கள் குடும்பப் பொருளாதாரத்தை வலுப்படுத்த உதவும் விதத்தினை இரண்டு காரணங்கள் காட்டி சுருக்கமாக விவரிக்குக.
2. ''நாட்டில் எழுத்தறிவு விருத்தியடைதல் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும்'' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

## ஆள்வீத வருமானம்

ஆள்வீத வருமானம் என்பது நாடுகளுக்கிடையேயான அபிவிருத்தியை ஒப்பிடுவதற்குப் பயன்படுத்தக்கூடிய இன்னுமொரு முக்கிய அளவு கோலாகும். ஆள்வீத வருமானம் என்பது குறிப்பிட்ட ஒரு நாட்டில் அனைத்து வழிகளாலும் பெறப்படும் மொத்த வருமானத்தை நட்டாண்டுச் சனத்தொகையினால் வகுக்கும் போது பெறப்படும் அளவாகும். தினசரி வாழ்க்கையில் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பொருள்கள், சேவைகள் என்பவற்றைப் பயன்படுத்த நேரிடுகிறது. உரு 4.6 இனை அவதானிப்பதன் மூலம் பொருள்கள், சேவைகள் பற்றி விளங்கிக் கொள்ள முடியும்.

**பொருள்கள், சேவைகள் என்பவற்றால் கருதப்படுவன யாவை?**


| பொருள்கள் | சேவைகள் |
|---|---|
| நாளாந்த வாழ்க்கையில் பல்வேறு தேவைகளையும் நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் அனைத்தும். | நாளாந்த வாழ்க்கையை மேலும் வசதிகள் மிக்கதாக்குவதற்கு உதவுகின்றவை. |
| **எடுத்துக்காட்டு**<br>அரிசி, சீனி, பருப்பு, மேசை, கதிரை, புத்தகங்கள், பேனை,வாகனம். | **எடுத்துக்காட்டு**<br>கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு, வானொலிச்சேவை, தொலைக்காட்சிசேவை, தொலைபேசிசேவை. |

உரு 4.6


- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -

நாளாந்த வாழ்க்கைக்கான பல்வேறு தேவைகளை நிறைவு செய்வதற்குப் பொருட்கள், சேவைகள் என்பன அவசியமாகும். பொருட்கள், சேவைகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு வருமானம் அவசியமாகும். உங்கள் குடும்பமும் வருமானத்தைப் பல வழிகளிலும் பெற்றுக் கொள்கிறது அல்லவா? உரு 4.7 இலிருந்து நீங்கள் அதனை விளங்கிக் கொள்ளலாம்.

**தனிநபர் வருமானம் பெறும் பல்வேறு வழிகள்**




**உரு 4.7**

உரு 4.7 இன் படி குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தத்தமது ஆற்றலுக்குப் பொருத்தமான விதத்தில் வருமானத்தைப் பெறும் முறை மேலே காட்டப்பட்டுள்ளது. சிலருக்கு பலவழிகளிலும் வருமானத்தைப் பெற முடியும். தனிநபரின் அறிவு, பயிற்சி கல்வித்தரம் என்பவற்றுக்கிணங்கத் தொழிலும் பல்வகைப்பட்டனவாக அமையும். இவ்வருமானத்தை நாளாந்தம், மாதாந்தம், வருடாந்தம் அல்லது தவணை முறையில் பெறமுடியும்.

இவ்வகையில்...........

**ஒரு நாட்டில் அனைத்து வழிகளாலும் பெறப்பட்ட ஆண்டு ஒன்றின் வருமானம் மொத்தத் தேசிய வருமானம் என அழைக்கப்படும். நாட்டின் மொத்தத் தேசிய வருமானத்தை அந்நாட்டின் நட்டாண்டுச் சனத்தொகையால் வகுக்கும் போது ஆள்வீத வருமானம் பெறப்படும்.**

## செயற்பாடு

1. உங்கள் குடும்பம் வருமானம் பெறும் பல்வேறு வழிகளையும் குறிப்பிடுக.
2. ஒரு நாடு வருமானம் பெறும் மூன்று வழிகளை எழுதுக.

ஆள்வீத வருமானம் பற்றி மேலும் விளக்குவதற்காக பாடப்பொறுப்பாசிரியர் எளிய உதாரணமொன்றை எடுத்துக்காட்டினார்.

**பத்மினியின் குடும்ப அங்கத்தவர்கள் ஐவர்**

| | | | |
|---|---|---|---|
| தந்தை - ஆசிரியர் பெறும் மாத வருமானம் | = | ரூ. | 20000. 00 |
| தாய் - எழுதுவினைஞர் பெறும் மாதவருமானம் | = | ரூ. | 18000. 00 |
| அறை வாடகை வருமானம் | = | ரூ. | 1000. 00 |
| வளவின் விவசாய உற்பத்தி வருமானம் | = | ரூ. | 300. 00 |
| வங்கி வைப்புக்கான வட்டி | = | ரூ. | 200. 00 |
| | = | ரூ. | 39500. 00 |

$$\frac{\text{பத்மினியின் குடும்ப மாத வருமானம் - 39500. 00}}{\text{குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை - 5}} = \text{ரூ. 7900. 00}$$

பத்மினியின் தாய், தந்தை ஆகியோர் மாதவருமானம் பெற்ற போதும் பத்மினி, அவள் தங்கை, தம்பி ஆகியோர் வருமானம் பெறாத மாணவர்களாவார். எனினும் குடும்பத்திலுள்ள அனைவருக்கும் மாத வருமானத்தைப் பங்கிடும் போது குடும்பத்தில் ஆள்வீத வருமானம் ரூ. 7900.00 ஆகும்.

பத்மினியின் குடும்பத்தின் ஆள்வீத வருமானத்தைக் கணக்கிட்டுக் காட்டிய ஆசிரியர் நாட்டின் ஆள்வீத வருமானத்தைத் தயாரிக்கும் விதத்தையும் பின்வருமாறு விளக்கிக் காட்டினார்.

$$\text{ஆள்வீத வருமானம்} = \frac{\text{மொத்தத் தேசிய வருமானம்}}{\text{நாட்டின் நட்டாண்டு சனத்தொகை}}$$

எந்த ஒரு நாட்டினதும் மொத்தத் தேசிய வருமானமானது இளைஞர், முதியோர், வணக்கத்துக்குரியோர், தொழில் செய்பவர், செய்யாதவர் அனைவரிடையேயும் சமமாகப் பகிரப்படுதல் மூலம் ஆள்வீத வருமானப் பெறுமானம் தீர்மானிக்கப்படுகிறது. நாட்டில் தொழில் செய்யாதவர்கள் தொகை அதிகமாகக் காணப்பட்டால் அந்நாட்டின் ஆள்வீத வருமானம் குறைவான பெறுமானம் கொண்டிருக்கும். அதிக அளவினர் பொருள்கள் சேவைகள் உற்பத்தி விடயங்களில் ஈடுபட்டிருப்பின் ஆள்வீத வருமானம் உயர்பெறுமானம் கொண்டிருக்கும்.

2010 ஆம் ஆண்டின் தென்னாசிய நாடுகளின் மொத்தத் தேசிய வருமானம், ஆள்வீத வருமானம் என்பவற்றை அட்டவணை 4.4 எடுத்துக் காட்டுகிறது. அட்டவணையிலுள்ள தரவுகளின்படி சில நாடுகளின் மொத்தத் தேசிய வருமானம் உயர் பெறுமானம் கொண்டிருந்த போதும் ஆள்வீத வருமானம் குறைந்த பெறுமானத்தைக் கொண்டுள்ளன. வேறு சில நாடுகளில் மொத்தத் தேசிய வருமானம் ஏனைய நாடுகளைவிட குறைவானதாக இருந்த போதும் ஆள்வீத வருமானம் உயர் பெறுமானம் கொண்டுள்ளன.

தென்னாசிய நாடுகளிடையே மொத்த தேசிய வருமானத்தில் உயர் பெறுமதியுடைய நாடாக இந்தியா விளங்குகிறது. எனினும் ஆள்வீத வருமானம் இலங்கையை விடக் குறைவானதாகும். இந்தியாவின் சனத்தொகை பெருமளவில் காணப்படுவதே ஆள்வீத வருமானம் குறைவாகக் காணப்படுவதற்கான காரணமாகும்.

மாலை தீவுகளின் மொத்தத் தேசிய வருமானம் ஏனைய நாடுகளைவிட குறைவான போதும் ஆள்வீத வருமானம் உயர் மட்டத்தில் காணப்படுகிறது. தென்னாசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் ஆள்வீத வருமானம் உயர் மட்டத்தில் உள்ளது. ஆள்வீத வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் அபிவிருத்தி மட்டத்தை ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். அட்டவணை 4.4 இலுள்ள தகவல்களை அவதானித்து அதனை விளங்கிக் கொள்ளலாம்.

## செயற்பாடு

1. தரப்பட்டுள்ள அட்டவணை 4.4 இனைக் கொண்டு தென்னாசியா நாடுகளின் 2010 ஆம் ஆண்டின் ஆள்வீத வருமானத்தைக் காட்டும் நிரல் வரைபொன்றைத் தயாரிக்குக.

2. ஆள்வீத வருமானம் உயர் மட்டத்திலான நாட்டையும் ஆள்வீத வருமானம் குறைந்த மட்டத்திலான நாட்டையும் குறிப்பிடுக.

3. இலங்கையின் ஆள்வீத வருமானத்தை தென்னாசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டு அது பற்றிய உமது கருத்துக்களைத் தருக.

## தென்னாசிய நாடுகளின் மொத்தத் தேசிய வருமானமும், ஆள்வீத வருமானமும்.

| குறிகாட்டி / நாடுகள் | ஆண்டு | இலங்கை | இந்தியா | பாகிஸ் தான் | பங்களா தேஷ் | நேபாளம் | பூட்டான் | மாலை தீவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தத் தேசிய வருமானம் (ஐ.அ.டொலர்) (மில்லியன்களில்) | 2010 | 46,738 | 1566,636 | 182,537 | 104,478 | 14,529 | 1,361 | 1,340 |
| ஆள்வீத வருமானம் (ஐ.அ.டொலர்)(மில்லியன்களில்) | 2010 | 2,290 | 1,340 | 1,050 | 640 | 490 | 1,920 | 4,270 |

**அட்டவணை 4.4**

**மூலம்: http:stersources.worldbank/DATASTATISTICS/ResourcesGNI.PDF2012.02.16**

ஒரு நாட்டில் வாழும் மக்களின் ஆள்வீத வருமானம் அதிகரிப்பதனால் ஏற்படும் பயன்கள்.

- வறுமை ஒழிக்கப்படும்.
- கடன்படும் தன்மை இல்லாது ஒழியும்.
- குடும்பவருமான மட்டம் உயர்வடையும்.
- நாட்டில் சிறந்த சந்தைகள் உருவாகும்.
- வேலைவாய்ப்புகள் நாட்டினுள் உருவாகும்.
- நாட்டினுள் பொருட்கள், சேவைகள் என்பனவற்றின் உற்பத்தி உயர்வடையும்.
- பொருட்கள், சேவைகள் என்பனவற்றைக் கொள்வனவு செய்யும் சக்தி அதிகரிக்கும்.
- நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பாட்டையும்.

ஆள்வீத வருமானத்தை உயர்வடையச் செய்து நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதற்கு மக்கள் என்ற வகையில் நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பல உள்ளன. அவையாவன:

- நேரத்தின் உச்ச அளவுப் பயனைப் பெற்று பயனுறுதி மிக்க செயல்களில் ஈடுபடுதல்.
- தமது சக்திக்கேற்ற விதத்தில் குடும்பத்துக்கு / நாட்டுக்கு ஏற்ற பொருட்கள், சேவைகள் என்பனவற்றின் உற்பத்தியில் பங்களிப்புச் செய்தல்.
- உள்நாட்டு உற்பத்திகளைக் கொள்வனவு செய்தலும், மதிப்பளித்தலும்
- வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்.
- தமது சக்திக்கேற்ற அளவில் நாட்டுக்குப் பயனுள்ள விதத்தில் சேவை செய்தல்.

இவற்றைக் கருத்திற் கொண்டு இளையவர், முதியவர், பெரியவர், சிறியவர் ஆகிய அனைவரும் செயற்படுதல் வேண்டும். நாடும், மக்களும் உயர்வடைய ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும். தம்மால் உற்பத்தி செய்யக்கூடியனவற்றை ஏனையோரின் பயன்பாட்டிற்கு உற்பத்தி செய்தல், நாட்டின் முன்னேற்றத்துக்கான இரகசியமாகும். எறும்புகள், தேனீக்கள் என்பனவற்றின் செயற்பாடுகள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும். அவை தம்மால் செய்யக் கூடியவற்றைத் தமது உச்ச அளவு வலுவைப் பயன்படுத்திப் பிறரின் பயன்பாட்டுக்காக உழைக்கின்றன. நாட்டு மக்கள் என்ற வகையில் நீங்களும் இதனை உணர்ந்து செயற்படுதல் மூலம் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்ய முடியும். அபிவிருத்தி தொடர்பான மேலும் பல தகவல்களை நீங்கள் உயர் வகுப்புகளில் கற்றுக் கொள்ள முடியும்.

## செயற்பாடு

1. ''நாட்டின் பிரஜை என்ற வகையில் ஆள்வீத வருமானம் அதிகரிப்பதற்கு நான் வழங்கும் பங்களிப்பு'' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.
2. அயல் நாடுகளுடன் ஒற்றுமையாக இருத்தல் நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் விதத்தினை இரு உதாரணங்கள் மூலம் விளக்குக.

## வேலை வாய்ப்பு

வேலை வாய்ப்பு பற்றி விளக்குவதற்கு ஆசிரியர் பல்வேறு துறைகளில் தொழில் புரிவோரைக் காட்டும் சுவரொட்டிகளை மாணவர் பார்வையிட வாய்ப்பளித்தார்.



உரு 4.8 பல்வேறு தொழில்கள்

## செயற்பாடு

உரு 4.8 இலுள்ள படங்களை நன்கு அவதானித்து விவசாயம், கைத்தொழில், சேவை என இத்தொழில்களை வகைப்படுத்துக.

மக்கள் ஈடுபட்டுள்ள தொழில்கள் மூன்று பிரதான துறைகளைக் கொண்டவையென இனங்காணப்பட்டுள்ளன. அவையாவன.

1. விவசாயத்துறை.
2. கைத்தொழில்துறை.
3. சேவைத்துறை என்பனவாகும்.

## விவசாயத்துறை

ஒரு நாட்டில் தொழில் புரிவோர் எண்ணிக்கையில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் (எண்ணிக்கையினர்) சதவீதத்தினர் விவசாயத்துறையில் தொழில் புரிவோர் எனக் கருதப்படுவர்.

தென்னாசியா நாடுகளைப் போலவே உலகின் எல்லா நாட்டு மக்களும் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

| | | |
|---|---|---|
| உணவுப் பயிர்ச் செய்கை | - | நெல், சோளம், கோதுமை, காய்கறி, பழங்கள், பானவகைகள் தொடர்பான பயிர்ச் செய்கை. |
| கைத்தொழிலுக்கான மூலப்பொருள் உற்பத்தி | - | கரும்பு, பருத்தி, இறப்பர் பயிர்ச்செய்கை. |

விவசாயம் தொடர்பில் நிலம் பண்படுத்தல், பயிர்களை நாட்டுதல், பசளை இடுதல், களைகளைக் கட்டுப்படுத்தல். அறுவடை செய்தல் போன்ற வேலைகளுக்கு தொழிலாளர் உழைப்பு தேவைப்படுகின்றது. இதற்கு ஆரோக்கியமான உடலுறு-தியுடையவர்களின் உழைப்பே தேவையானதாகும். இவர்களின் தொழில் வாய்ப்பு பெருமளவு விவசாய நிலங்களிலேயே உருவாகின்றது. நாட்டில் தொழில் புரியும் சனத்தொகையில் அதிக சதவீதத்தினர் விவசாயத் துறைத் தொழில்களில் ஈடுபட்டிருப்பின் நாட்டின் பொருளாதாரம் (மொத்த தேசிய உற்பத்தி) போதுமான வலுவுடையதாக அமையாது. அதற்கான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இலங்கை உட்பட தென்னாசிய நாடுகளுக்கு இக்காரணங்கள் எவ்வளவுக்குப் பொருத்தமானவை என்பதைப் பரிசீலனை செய்க.

- விவசாயத்துறையில் அறுவடையைப் பெறும் வரையில் வருமானம் நிரந்தரமற்றிருத்தல் (எதிர்பாராத வானிலை மாற்றங்கள், பூச்சிகளின் தாக்கம் என்பன காரணமாக எதிர்பார்த்த அறுவடையைப் பெற்றுக் கொள்வதன் முன்னர் பயிர் அழிவடைவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் காணப்படல்.)
- பயிர்ச் செய்கை அறுவடை செய்யும் காலத்தில் அவற்றின் விலை சந்தையில் பெரும்பாலும் வீழ்ச்சியடைதல் (இலங்கையில் நெல், பழங்கள் என்பவற்றின் விலை வீழ்ச்சியடைதல்.)
- விவசாய உற்பத்திகளைச் சேகரித்து நீண்ட காலம் வைக்க முடியாதிருத்தல். (காய்கறிகள், பழங்கள், கீரைவகைகள் என்பன.)

- விவசாய உற்பத்திகளை நீண்டகாலம் வைத்திருப்பதற்கான செலவு அதிகமாக உள்ளதால் குறுகிய காலத்தினுள் நுகர்வுக்காக வழங்குதல். (அரிசி, காய்கறி, பால், இறைச்சி, மீன் முதலியவற்றை சந்தையில் விலை அதிகரிக்கும் வரை விவசாயிக்குக் களஞ்சியப்படுத்தி வைத்திருக்க முடியாமை)
- விவசாய உற்பத்திகளுக்கு நியாயமான விலை கிடைக்காமை. (இலங்கையில் நெல், மிளகாய், வெங்காயம், காய்கறி உற்பத்தி)

இத்தகைய காரணங்களினால் உழைப்போரில் பெருமளவினர் விவசாயத்துறைசார் தொழில்களில் ஈடுபட்டிருந்தபோதும் அவர்கள் பெறும் வருமானம் குறைவாகவே உள்ளது. அவ்வருமானமும் நிரந்தரமானதன்று.

## கைத்தொழில்

ஒரு நாட்டில் தொழில் புரிவோர் எண்ணிக்கையில் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் சதவீதத்தினர் கைத்தொழில் துறையில் தொழில் புரிவோர் என அழைக்கப்படுவர். பின்வரும் அட்டவணையில் பயிர்ச் செய்கை மற்றும் கனியவளம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் காட்டப்பட்டுள்ளன.

| விவசாயப்பயிர்கள் அடிப்படையிலான கைத்தொழில்கள் | கனியவளம் அடிப்படையிலான கைத்தொழில்கள். |
|---|---|
| இறப்பர் டயர் உற்பத்தி | இரும்பு - இரும்பு, உருக்கு உற்பத்தி |
| பருத்தி - துணிகள் உற்பத்தி | களிமண் - ஓடு, செங்கல் |
| கரும்பு - சீனி உற்பத்தி | சுண்ணக்கல் - சீமெந்து |

## செயற்பாடு

1. உங்கள் பிரதேசத்தில் விவசாயம்சார் கைத்தொழில், கனியவளம்சார் கைத்தொழில் என வகைப்படுத்திய பட்டியலை அமைக்க.

விவசாயத்துறையை விட ஒப்பீட்டளவில் கைத்தொழில்சார் பொருள் உற்பத்தியில் பிரச்சினைகள் குறைவாகும்.

- கைத்தொழில்களுக்கு இயற்கை அனர்த்தங்களின் செல்வாக்குக் குறைவு. (வானிலை மாற்றங்களால் சேதம், பூச்சிகளின் தாக்கம்)


- ♦ கைத்தொழில் உற்பத்திகளைக் களஞ்சியப்படுத்தி வைத்திருக்க முடியும். அத்துடன் விலை வீழ்ச்சியடைவதோ, பழுதடைவதோ இடம்பெறாது. (உ- ம் : துணிவகைகள், சீமெந்து, குண்டூசி, டயர், என்பன)

- ♦ இயந்திரங்கள் மூலம் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதால் குறித்த அளவு பொருட்களை குறித்த காலத்தினுள் உற்பத்தி செய்யமுடியும். (1000 டயர் - 1 மாதத்தில், 10,000 ஊசி ஒரு நாளில்)

இத்தகைய காரணங்களினால் விவசாயத்துறை வருமானத்தை விட கைத்தொழில் துறையில் ஈடுபட்ட தொழிலாளர் நிலையான வருமானத்தைப் பெறக்கூடியவர்களாக இருக்கின்றனர். நீங்கள் வாழும் பிரதேசங்களிலும் கைத்தொழில்கள் அமைந்திருக்கலாம். நாட்டு மக்களில் இன்னுமொரு பகுதியினர் கைத்தொழிற்சாலைகளில் இயந்திரங்களை இயக்குதல், பழுது பார்த்தல் எனும் பகுதிகளில் பணிபுரிவதனைக் காணலாம்.

## சேவைத்துறை

ஒரு நாட்டில் தொழிலில் ஈடுபட்டுள்ள சனத்தொகை எண்ணிக்கையில் சேவைகளில் ஈடுபட்டுள்ள சனத்தொகையின் சதவீதம் சேவைத்துறையில் தொழில் புரிவோர் எனக் கருதப்படுகிறது. மேலே கூறப்பட்ட விவசாயத்துறை, கைத்தொழில் துறை என்பவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் பல்வேறு கருமங்களைச் செய்வதற்கு சேவைத்துறை மிகவும் அவசியமாகும். கீழே இவ்வாறான சேவைகள் சில தரப்பட்டுள்ளன.



நாட்டின் சனத்தொகையில் அதிக சதவீதத்தினர் சேவைத்துறையில் ஈடுபட்டிருப்பின் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர் மட்டத்தில் இருக்கும் எனக் கருதலாம். மக்களின் நாளாந்த வாழ்க்கையின் செயற்பாடுகளை மிகவும் இலகுவாக்க எல்லாச் சேவைகளினதும் உதவி தேவையாகும். அரச நிர்வாகிகள் தமது நாட்டின் அபிவிருத்திக்கான திட்டங்களை வகுக்கும்போது சேவை வசதிகளை மேம்படுத்தவே பெருமளவு முயற்சி எடுக்கின்றனர். நாட்டில் தொழில்புரியும் மக்களில் அதிக சதவீதத்தினர் சேவைத் தொழிலில் ஈடுபட்டிருப்பின் அந்நாட்டில் உயர்ந்த அபிவிருத்தி மட்டம் காணப்படும்.

## செயற்பாடு

சேவைத்துறையில் பல்வேறு சேவைகளில் ஈடுபடும் தொழிலாளர்களைக் காட்டும் சுவரொட்டி ஒன்று தயாரிக்குக.

நாட்டின் அபிவிருத்தி பற்றிய தகவல்களை சேகரிக்கும்போது விவசாயம், கைத்தொழில், சேவை எனும் துறைகளில் நாட்டு மக்களில் எவ்வளவினர் ஈடுபட்டுள்ளனர் என்பதை அவதானித்தல் முக்கியமானதாகும்.

இப்போது நாம் இலங்கையின் வேலை வாய்ப்பு மட்டத்தை ஏனைய தென்னாசிய வலய நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

### தென்னாசிய நாடுகளின் வேலைவாய்ப்பு, வேலைவாய்ப்பின்மை சதவீதம்

| நாடுகள் / குறிகாட்டி | உரிய ஆண்டு | இலங்கை | இந்தியா | பாகிஸ்தான் | பங்களாதேஷ் | நேபாளம் | பூட்டான் | மாலை தீவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| விவசாயம் | 2004 | 32.7 | 52.0 | 45 | 45 | 75 | 43.7 | 11 |
| கைத்தொழில் | 2004 | 24.2 | 14.0 | 20.1 | 30.0 | 7.0 | 39.1 | 23.0 |
| சேவைத்துறை | 2004 | 43.1 | 34.0 | 34.9 | 25.0 | 18.0 | 17.2 | 65.0 |
| வேலை வாய்ப்பின்மை | 2008-2011 | 4.2% (2011) | 9.8 (2011) | 5.6% (2011) | 5% (2011) | 46 (2008) | 4 (2009) | 14.5 (2010) |

அட்டவணை 4.5

மூலம்: www.cia.gov / library / Publications


ஒரு நாட்டின் பிரஜை எந்தவொரு தொழிலிலும் ஈடுபடாதிருப்பது வேலைவாய்ப்பின்மை எனப்படும். அட்டவணை 4.5 இல் வேலைவாய்ப்பின்மை சதவீதம் காட்டப்பட்டுள்ளது. நாட்டின் சனத்தொகையில் தொழில்புரியும் வயதெல்லையில்

உள்ளோர் வேலையில்லாதிருத்தல் நாட்டின் அபிவிருத்திக்குத் தடையாகும். தொழில் புரியாதிருப்போருக்காக தொழில் புரிவோர் வருமானத்தைப் பெறவேண்டிய நிலை உள்ளது. இதனால் ஆள்வீத வருமானம் குறைவடைதலும், வறுமை அதிகரித்தலும் நிகழும். பொருட்கள், சேவைகளை கொள்வனவு செய்யும் சக்தி குறைவடையும். அடிப்படை மனிதத் தேவைகளை (உணவு, உடை, உறையுள்) நிறைவேற்றுவதற்குக் கடன்படும் நிலையும் ஏற்படும்.

## செயற்பாடு

1. விவசாயத்துறைத் தொழிலில் அதிக எண்ணிக்கையினர் ஈடுபட்டுள்ள நாடு எது?
2. சேவைத்துறைத் தொழிலில் அதிக எண்ணிக்கையினர் ஈடுபட்டுள்ள நாடு எது?
3. சேவைத்துறையின் வேலை வாய்ப்பினைக் காட்டும் எண்ணிக்கையினரை ஒழுங்கு வரிசையில் எழுதுக.
4. இலங்கையின் வேலைவாய்ப்பு மட்டத்தை தென்னாசியாவிலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டு ஐந்து வாக்கியங்களை எழுதுக.

ஒரு நாட்டின் வேலைவாய்ப்பு வகைகள் மூன்று துறைகளின் கீழ் ஆராயப்பட்டாலும் இவை பிரிக்க முடியாதவாறு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் விதத்தினை கீழேயுள்ள உரு 4.9 இல் எடுத்துக்காட்டுகிறது.




**உரு 4.9 நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்யும் பல்வேறு துறைகள்**

விவசாயத்தினால் கைத்தொழிலும் கைத்தொழிலினால் சேவைத்துறையும் ஒன்றுக்கொன்று ஊட்டமளிக்கும் விதத்தினை நாடுகளின் உற்பத்திச் செயன் முறைகளினூடாக இனங்காண முடியும்.

**விவசாயம்**
கால்நடை
வளர்ப்பு - பால்

→

**கைத்தொழில்**
பால்மா
உற்பத்தி

→

**சேவை**
பங்கீடும்
விற்பனையும்

## செயற்பாடு

- ‘‘நாட்டின் அபிவிருத்திக்கு சேவைத் துறையின் பங்களிப்பு அவசியமானதாகும்.’’ இக்கூற்றினை உறுதிப்படுத்துவதற்கு மூன்று காரணங்களை முன்வைக்குக.

- ‘‘விவசாயத்துறையில் அதிகளவிலானோர் ஈடுபடுவதால் மட்டும் அந்நாட்டை அபிவிருத்தி அடைந்த நாடென தீர்மானிக்க முடியாது.’’ இதனை நிரூபிப்பதற்கு இரண்டு காரணங்களை முன்வைக்குக.

- இலங்கையில் சேவைத் துறையின் வேலை வாய்ப்பு உயர் சதவீதத்தில் காணப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று காரணங்களை எடுத்துக் காட்டுக.

- ‘‘ஆள்வீத வருமானம் குறைவடைவதற்கு நாட்டின் வேலையற்றோர் காரணமாகும்’’ இரு விடயங்களின் அடிப்படையில் விளக்குக.

- ‘‘இலங்கையின் அபிவிருத்திக்கு நான் செய்யக் கூடியவை’’ என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.



## மாணவர் ஆய்வு

உங்கள் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைத் தெரிவு செய்து அவற்றின் உற்பத்திக்கு விவசாயம், கைத்தொழில், சேவை என்னும் துறைகள் ஒன்றோடொன்று தொடர்புபடும் விதத்தினைப் பரிசீலனை செய்து அறிக்கை ஒன்றினைத் தயாரிக்க.